## வேதாந்த தேசிகன் அருளிச் செய்த
## அதிகாரசங்கிரகம்

### தனியன்

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

---

## வேதாந்த தேசிகன் அருளிச் செய்த
## அதிகாரசங்கிரகம்

** பொய்கை முனி பூதத்தார் பேயாழ்வார் * தண்
பொருநல் வரும் குருகேசன் விட்டுசித்தன் *
துய்ய குலசேகரன் நம் பாணநாதன் *
தொன்டரடிப்பொடி மழிசை வந்த சோதி **
வையம் எல்லாம் மறை விளங்க வாள் வேல் ஏந்தும் *
மங்கையர் கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும் *
செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித் *
தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே 1

இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும் பேற்றில் *
இகழாத பல்லுறவில் இராகம் மாற்றில் *
தன் பற்றில் வினை விலக்கில் தகவோக்கத்தில் *
தத்துவத்தை உணர்த்துதலில் தன்மை ஆக்கில் **
அன்பர்க்கே அவதரிக்கும் ஆயன் நிற்க *
அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு *
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும் *
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே 2

** என் உயிர் தந்து அளித்தவரைச் சரணம் புக்கு *
யான் அடைவே அவர் குருக்கள் நிரை வணங்கி *
பின் அருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல் *
பெரிய நம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி *
நன்னெறியை அவர்க்கு உரைத்த உய்யக்கொண்டார் *
நாதமுனி சடகோபன் சேனை நாதன் *
இன்னமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு *
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே 3

ஆரண நூல் வழிச் செவ்வை * அழித்திடும் ஐதுகர்க்கு * ஓர்
வாரணமாய் * அவர் வாதக் கதலிகள் மாய்த்த பிரான் **
ஏரணி கீர்த்தி * இராமாநுச முனி இன்னுரை சேர் *
சீரணி சிந்தையினோம் * சிந்தியோம் இனித் தீவினையே 4

நீள வந்தின்று விதி வகையால் * நினைவு ஒன்றிய நாம் *
மீள வந்தின்னும் வினை உடம்பொன்றி * விழுந்துழலாது **
ஆள வந்தார் எனவென்று * அருள் தந்து விளங்கிய சீர் *
ஆளவந்தார் அடியோம் * படியோம் இனி அல்வழக்கே 5

காளம் வலம்புரி அன்ன * நற்காதல் அடியவர்க்குத் *
தாளம் வழங்கித் * தமிழ் மறை இன்னிசை தந்த வள்ளல் **
மூளும் தவ நெறி மூட்டிய * நாதமுனி கழலே *
நாளும் தொழுது எழுவோம் * நமக்கார் நிகர் நானிலத்தே 6

** ஆளும் அடைக்கலம் என்றெம்மை * அம்புயத்தாள் கணவன் *
தாளிணை சேர்ந்து * எமக்கும் அவை தந்த தகவுடையார் **
மூளும் இருட்கள் விள்ள * முயன்றொடிய மூன்றின் உள்ளம் *
நாளும் உகக்க இங்கே * நமக்கோர் விதி வாய்க்கின்றதே 7

** திருவுடன் வந்த செழுமணி போல் * திருமால் இதயம் *
மருவிடம் என்ன மலரடி சூடும் * வகை பெறு நாம் **
கருவுடன் வந்த கடுவினை ஆற்றில் * விழுந்து ஒழுகாது *
அருவுடன் ஐந்தறிவார் * அருள் செய்ய அமைந்தனரே 8

அமையா இவை என்னும் ஆசையினால் * அறு மூன்றுலகில் *
சுமையான கல்விகள் சூழ வந்தாலும் * தொகை இவை என்று **
இமையா இமையவர் ஏத்திய * எட்டிரண்டு எண்ணிய * நம்
சமயாசிரியர் * சதிர்க்கும் தனி நிலை தந்தனரே 9

நிலை தந்த தாரகனாய் * நியமிக்கும் இறைவனுமாய் *
இலதொன்று எனா வகை எல்லாம் * தனதெனும் எந்தையுமாய்த் **
துலை ஒன்றிலை என நின்ற * துழாய் முடியான் உடம்பாய் *
விலை இன்றி நாம் அடியோம் என்னும் * வேதியர் மெய்ப்பொருளே 10

பொருள் ஒன்றென நின்ற * பூமகள் நாதன் அவனடி சேர்ந்து *
அருள் ஒன்றும் அன்பன் * அவன் கொள் உபாயம் அமைந்த பயன் **
மருள் ஒன்றிய வினை வல்விலங்கென்று * இவை ஐந்தறிவார் *
இருள் ஒன்றிலா வகை * என் மனம் தேற இயம்பினரே 11

தேற இயம்பினர் * சித்தும் அசித்தும் இறையும் என *
வேறு படும் வியன் தத்துவ மூன்றும் * வினை உடம்பில் **
கூறு படும் கொடு மோகமும் * தான் இறையாம் குறிப்பும் *
மாற நினைந்து அருளால் * மறை நூல் தந்த வாதியரே 12

வாதியர் மன்னும் தருக்கச் செருக்கின் * மறை குலையச் *
சாது சனங்கள் அடங்க நடுங்கத் * தனித் தனியே **
ஆதி எனா வகை * ஆரண தேசிகர் சாற்றினர் * நம்
போதமரும் திரு மாதுடன் * நின்ற புராணனையே 13

நின்ற புராணன் அடி இணை ஏந்தும் * நெடும் பயனும் *
பொன்றுதலே நிலை என்றிடப் * பொங்கும் பவக்கடலும் **
நன்றிது தீயது என்று * நவின்றவர் நல்லருளால் *
வென்று புலன்களை * வீடினை வேண்டும் பெரும் பயனே 14

வேண்டும் பெரும் பயன் * வீடென்று அறிந்து விதி வகையால் *
நீண்டும் குறுகியும் நிற்கும் * நிலைகளுக்கு ஏற்கும் அன்பர் **
மூண்டொன்றில் மூல வினை மாற்றுதலில் * முகுந்தன் அடி
பூண்டன்றி * மற்றோர் புகல் ஒன்றிலை என நின்றனரே 15

நின்ற நிலைக்குற நிற்கும் கருமமும் * நேர் மதியால் *
நன்றென நாடிய ஞானமும் * நல்கும் உட்கண் உடையார் **
ஒன்றிய பத்தியும் * ஒன்றுமிலா விரைவார்க்கு அருளால் *
அன்று பயன் தரும் * ஆறும் அறிந்தவர் அந்தணரே 16

அந்தணர் அந்தியர் * எல்லையில் நின்ற அனைத்துலகும் *
நொந்தவரே முதலாக * நுடங்கி அனன்னியராய் **
வந்தடையும் வகை * வன் தகவேந்தி வருந்திய * நம்
அந்தமில் ஆதியை * அன்பர் அறிந்து அறிவித்தனரே 17

அறிவித்தனர் அன்பர் * ஐயம் பறையும் உபாயம் இல்லா *
துறவித் துனியில் * துணையாம் பரனை வரிக்கும் வகை **
உறவித்தனை இன்றி * ஒத்தார் என நின்ற உம்பரை நாம் *
பிறவித் துயர் செகுப்பீர் என்று * இரக்கும் பிழை அறவே 18

அறவே பரம் என்று * அடைக்கலம் வைத்தனர் அன்று நம்மை *
பெறவே கருதிப் * பெரும் தகவுற்ற பிரான் அடிக்கீழ் **
உறவே இவன் உயிர் காக்கின்ற * ஓர் உயிர் உண்மையை * நீ
மறவேல் என * நம் மறை முடி சூடிய மன்னவரே 19

மன்னவர் விண்ணவர் * வானோர் இறை ஒன்றும் வான் கருத்தோர் *
அன்னவர் வேள்வி * அனைத்தும் முடித்தனர் அன்புடையார்க்கு **
என்ன வரம் தரவென்ற * நம் அத்திகிரித் திருமால் *
முன்னம் வருந்தி * அடைக்கலம் கொண்ட நம் முக்கியரே 20

முக்கிய மந்திரம் காட்டிய * மூன்றில் நிலை உடையார் *
தக்கவை அன்றித் * தகாதவை ஒன்றும் தமக்கு இசையார் **
இக்கருமங்கள் * எமக்குள என்னும் இலக்கணத்தால் *
மிக்க உணர்த்தியர் * மேதினி மேவிய விண்ணவரே 21

விண்ணவர் வேண்டி விலக்கின்றி மேவும் * அடிமை எல்லாம் *
மண்ணுலகத்தில் * மகிழ்ந்து அடைகின்றனர் ** வண்துவரைக்
கண்ணன் அடைக்கலம் கொள்ளக் * கடன்கள் கழற்றிய * நம்
பண்ணமரும் * தமிழ் வேதம் அறிந்த பகவர்களே 22

வேதம் அறிந்த பகவர் * வியக்க விளங்கிய சீர் *
நாதன் வகுத்த வகை பெறு நாம் * அவன் நல்லடியார்க்கு **
ஆதரம் மிக்க அடிமை இசைந்து * அழியா மறை நூல் *
நீதி நிறுத்த * நிலை குலையா வகை நின்றனமே 23

நின்றனம் அன்புடை வானோர் * நிலையில் நிலம் அளந்தான் *
நன்றிது தீயது இதென்று * நடத்திய நான்மறையால் **
இன்று நமக்கு இரவாதலின் * இம்மதியின் நிலவே *
அன்றி அடிக்கடி * ஆரிருள் தீர்க்க அடி உளதே 24

உளதான வல்வினைக்கு * உள்ளம் வெருவி உலகளந்த *
வளர் தாமரை இணை * வன்சரணாக வரித்தவர் தாம் **
களை தான் என எழும் * கன்மம் துறப்பர் துறந்திடிலும் *
இளைதா நிலை செக * எங்கள் பிரான் அருள் தேன் எழுமே 25

** தேனார் கமலத் திருமகள் நாதன் * திகழ்ந்து உறையும் *
வானாடு உகந்தவர் * வையத்து இருப்பிடம் ** வன் தருமக்
கானார் இமயமும் * கங்கையும் காவிரியும் கடலும் *
நானா நகரமும் * நாகமும் கூடிய நன்னிலமே 26

நன்னிலமாம் அது * நற்பகலாம் அது நன்னிமித்தமம் *
என்னலுமாம் அது * யாதானுமாம் அங்கு அடியவர்க்கு **
மின்னிலை மேனி விடும் பயணத்து * விலக்கு இலதோர் *
நன்னிலையாம் நடு நாடி வழிக்கு * நடைபெறவே 27

நடைபெற அங்கிப் பகல் ஒளி நாள் * உத்தராயணம் ஆண்டு *
இடை வரு காற்றிரவி * இரவின் பதி மின் வருணன் **
குடை உடை வானவர் கோமான் * பிரசாபதி என்று இவரால் *
இடை இடை போகங்கள் எய்தி * எழிற்பதம் ஏறுவரே 28

ஏறி எழிற்பதம் * எல்லா உயிர்க்கும் இதம் உகக்கும் *
நாறு துழாய் முடி * நாதனை நண்ணி அடிமையில் நம் **
கூறு கவர்ந்த * குருக்கள் குழாங்கள் குரைகழற் கீழ் *
மாறுதல் இன்றி * மகிழ்ந்தெழும் போகத்து மன்னுவமே 29

** மன்னும் அனைத்துறவாய் * மருள் மாற்றருள் ஆழியுமாய்த் *
தன் நினைவால் அனைத்தும் * தரித்து ஓங்கும் தனி இறையாய் **
இன்னமுதத்து அமுதால் * இரங்கும் திருநாரணனே *
மன்னியவன் சரண் * மற்றோர் பற்றின்றி வரிப்பவரக்கே 30

வரிக்கின்றனன் பரன் * யாவரை என்று மறை அதனில் *
விரிக்கின்றதும் குறி ஒன்றால் * வினையரை ஆதலின் நாம் **
உரைக்கின்ற நன்னெறி * ஒரும் படிகளில் ஓர்ந்து * உலகம்
தரிக்கின்ற தாரகனார் * தகவால் தரிக்கின்றனமே 31

தகவால் தரிக்கின்ற * தன் அடியார்களைத் தன் திறத்தில் *
மிக ஆதரம் செய்யும் * மெய்யருள் வித்தகன் மெய்யுரையின் **
அகவாய் அறிந்தவர் * ஆரண நீதி நெறி குலைதல் *
உகவார் என * எங்கள் தேசிகர் உண்மை உரைத்தனரே 32

உண்மை உரைக்கும் மறைகளில் ஓங்கிய * உத்தமனார் *
வண்மை அளப்பு அரிதாதலின் * வந்து கழல் பணிவார் **
தண்மை கிடக்கத் * தரம் அளவென்ற இயப்பிலதாம் *
உண்மை உரைத்தனர் * ஓரம் தவிர உயர்ந்தனரே 33

உயர்ந்தனன் காவலன் அல்லார்க்கு * உரிமை துறந்து உயிராய் *
மயர்ந்தமை தீர்ந்து * மற்றோர் வழி இன்றி அடைக்கலமாய் **
பயந்தவன் நாரணன் * பாதங்கள் சேர்ந்து பழவடியார் *
நயந்த குற்றேவல் எல்லாம் * நாடு நன் மனு ஓதினமே 34

ஓதும் இரண்டை இசைந்து * அருளால் உதவும் திருமால் *
பாதம் இரண்டும் சரண் எனப் பற்றி * நம் பங்கயத்தாள் **
நாதனை நண்ணி * நலந்திகழ் நாட்டில் அடிமை எல்லாம் *
கோதில் உணர்த்தியுடன் * கொள்ளுமாறு குறித்தனமே 35

குறிப்புடன் மேவும் தருமங்கள் இன்றி * அக்கோவலனார் *
வெறித் துளவக் கழல் * மெய்யரண் என்று விரைந்தடைந்து **
பிரித்த வினைத் திரள் * பின் தொடரா வகை அப்பெரியோர் *
மறிப்புடை மன்னருள் வாசகத்தால் * மருள் அற்றனமே 36

மருளற்ற தேசிகர் * வான் உகப்பால் இந்த வையம் எல்லாம் *
இருள் அற்றிறையவன் * இணையடி பூண்டு உய எண்ணுதலால் **
தெருள் அற்ற செந்தொழில் * செல்வம் பெருகிச் சிறந்தவர் பால் *
அருள் உற்ற சிந்தையினால் * அழியா விளக்கு ஏற்றினரே 37

ஏற்றி மனத்து எழில் ஞான விளக்கை * இருள் அனைத்தும் *
மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு * மாயனும் காண கில்லான் **
போற்றி உகப்பதும் * புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ் *
சாற்றி வளர்ப்பதும் * சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே 38

முன் பெற்ற ஞானமும் * மோகம் துறக்கலும் மூன்று உரையில் *
தன் பற்ற தன்மையும் * தாழ்ந்தவர்க்கு ஈயும் தனித் தகவும் **
மன் பற்றி நின்ற வகை * உரைக்கின்ற மறையவர் பால் *
சின் பற்றி என் பயன் * சீர் அறிவோர்க்கு இவை செப்பினமே 39

** செப்பச் செவிக்கு அமுதென்னத் திகழும் * செழுங்குணத்துத் *
தப்பற்றவருக்குத் * தாமே உகந்து தரும் தகவால் **
ஒப்பற்ற நான்மறை * உள்ளக் கருத்தில் உறைத்துரைத்த *
முப்பத்திரண்டு இவை * முத்தமிழ் சேர்ந்த மொழித்திருவே 40

** புருடன் மணிவரம் ஆகப் பொன்றா மூலப்
பிரகிருதி மறுவாக * மான் தண்டாகத் *
தெருள் மருள் வாள் உறை ஆக ஆங்காரங்கள்
சார்ங்கம் சங்காக * மனம் திகிரி ஆக **
இருடிகங்கள் ஈரைந்தும் சரங்கள் ஆக *
இருபூத மாலை வனமாலை ஆகக் *
கருடன் உருவாம் மறையின் பொருளாம் கண்ணன் *
கரிகிரி மேல் நின்று அனைத்தும் காக்கின்றானே 41

** ஆராத அருள் அமுதம் பொதிந்த கோயில் *
அம்புயத்தோன் அயோத்தி மன்னற்கு அளித்த கோயில் *
தோலாத தனி வீரன் தொழுத கோயில் *
துணையான வீடணற்குத் துணையாம் கோயில் **
சேராத பயன் எல்லாம் சேர்க்கும் கோயில் *
செழுமறையின் முதல் எழுத்துச் சேர்ந்த கோயில் *
தீராத வினை அனைத்தும் தீர்க்கும் கோயில் *
திருவரங்கம் எனத் திகழும் கோயில் தானே 42

** கண்ணன் அடியிணை எமக்குக் காட்டும் வெற்பு *
கடுவினையர் இருவினையும் கடியும் வெற்பு *
திண்ணம் இது வீடு என்னத் திகழும் வெற்பு *
தெளிந்த பெரும் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு **
புண்ணியத்தின் புகல் இதெனப் புகழும் வெற்பு *
பொன்னுலகில் போகம் எல்லாம் புணர்க்கும் வெற்பு *
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு *
வேங்கட வெற்பென விளங்கும் வேத வெற்பே 43

** உத்தம அமர்த்தலம் அமைத்ததோர்
எழில் தனு * உய்த்த கணையால் *
அத்திர அரக்கன் முடி பத்தும்
ஒரு கொத்தென * உதிர்த்த திறலோன் **
மத்துறு மிகுத்த தயிர் மொய்த்த வெணெய்
வைத்தது உணும் * அத்தன் இடமாம் *
அத்திகிரி பத்தர் வினை தொத்தற
அறுக்கும் * அணி அத்திகிரியே 44

எட்டு மா மூர்த்தி எண் கணன் * எண் திக்கு
எட்டிறை எண் பிரகிருதி *
எட்டுமா வரைகள் ஈன்ற எண் குணத்தோன் *
எட்டெணும் எண் குண மதியோர்க்கு **
எட்டு மா மலர் எண் சித்தி எண் பத்தி *
எட்டு யோகாங்கம் எண் செல்வம் *
எட்டு மா குணம் எட்டெட்டு எணும் கலை *
எட்டிரத மேல் அதுவும் எட்டினவே 45

ஒண்தொடியாள் திருமகளும் தானுமாகி *
ஒரு நினைவால் ஈன்ற உயிர் எல்லாம் உய்ய *
வண்துவரை நகர் வாழ வசுதேவற்காய் *
மன்னவர்க்குத் தேர்ப் பாகனாகி நின்ற **
தண்துளவ மலர்மார்பன் தானே சொன்ன *
தனித் தருமம் தான் எமக்காய்த் தன்னை என்றும் *
கண்டு களித்து அடிசூட விலக்காய் நின்ற *
கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே 46

மூண்டாலும் அரியதனில் முயல வேண்டா *
முன்னம் அதில் ஆசை தனை விடுகை திண்மை *
வேண்டாது சரண நெறி வேறோர் கூட்டு *
வேண்டில் அயன் அத்திரம் போல் வெள்கி நிற்கும் *
நீண்டாகு நிறை மதியோர் நெறியில் கூடா *
நின் தனிமை துணை ஆக என்தன் பாதம்
பூண்டால் * உன் பிழைகள் எல்லாம் பொறுப்பன் என்ற *
புண்ணியனார் புகழ் அனைத்தும் புகழுவோமே 47

சாதனமும் நற்பயனும் நானே ஆவன் *
சாதகனும் என் வசமாய் என்னைப் பற்றும் *
சாதனமும் சரண நெறி அன்றுனக்குச் *
சாதனங்கள் இன்னிலைக்கோர் இடையில் நில்லா **
வேதனை சேர் வேறங்கம் இதனில் வேண்டா *
வேறெல்லாம் நிற்கு நிலை நானே நிற்பன் *
தூதனுமாம் நாதனுமாம் என்னைப் பற்றிச் *
சோகம் தீர் என உரைத்தான் சூழ்கின்றானே 48

தன் நினைவில் விலக்கின்றித் தன்னை நண்ணார் *
நினைவு அனைத்தும் தான் விளைத்தும் விலக்கு நாதன் *
என் நினைவை இப்பவத்தில் இன்று மாற்றி *
இணை அடிக்கீழ் அடைக்கலம் என்று எம்மை வைத்து **
முன் நினைவால் யாம் முயன்ற வினையால் வந்த *
முனிவயர்ந்து முத்தி தர முன்னே தோன்றி *
நன்னினைவால் நாம் இசையும் காலம் * இன்றோ
நாளையோ என்று நகை செய்கின்றானே 49

** பாட்டுக்கு உரிய பழையவர் மூவரைப் * பண்டொரு கால் *
மாட்டுக்கருள் தரு மாயன் * மலிந்து வருத்துதலால் **
நாட்டுக்கு இருள் செக * நான்மறை அந்தி நடை விளங்க *
வீட்டுக்கு இடைகழிக்கே * வெளி காட்டும் அம்மெய் விளக்கே 50

** உறு சகடம் உடைய ஒரு கால் உற்றுணர்ந்தன *
உடன் மருதம் ஒடிய ஒரு போதில் தவழ்ந்தன *
உறி தடவும் அளவில் உரலோடுற்று நின்றன *
உறு நெறி ஓர் தருமன் விடு தூதுக்கு உகந்தன *
மற நெறியர் முறிய பிருதானத்து வந்தன *
மலர்மகள் கை வருட மலர் போதில் சிவந்தன *
மறு பிறவி அறுமுனிவர் மாலுக்கு இசைந்தன *
மனு முறையில் வருவதோர் விமானத்து உறைந்தன **
அறம் உடைய விசயன் அமர் தேரில் திகழ்ந்தன *
அடல் உரக படமடிய ஆடிக் கடந்தன *
அறு சமயம் அறிவரிய தானத்து அமர்ந்தன *
அணி குருகை நகர் முனிவர் நாவுக்கு அமைந்தன *
வெறி உடைய துளவமலர் வீறுக்கு அணிந்தன *
விழு கரியோர் குமரன் என மேவிச் சிறந்தன *
விறல் அசுரர் படை அடைய வீயத் துரந்தன *
விடல் அரிய பெரிய பெருமாள் மென் பதங்களே 51

மறை உரைக்கும் பொருள் எல்லாம் மெய் என்று ஓர்வார் *
மன்னிய கூர்மதி உடையார் வண்குணத்தில் *
குறை உரைக்க நினைவில்லார் குருக்கள் தம் பால் *
கோதற்ற மனம் பெற்றார் கொள்வார் நம்மை **
சிறை வளர்க்கும் சில மாந்தர் சங்கேதத்தால் *
சிதையாத திண்மதியோர் தெரிந்தது ஓரார் *
பொறை நிலத்தின் மிகும் புனிதர் காட்டும் * எங்கள்
பொன்றாத நன்னெறியில் புகுதுவாரே 52

இது வழி இன்னமுது என்றவர் * இன்புலன் வேறிடுவார் *
இது வழியாம் அல என்று அறிவார் * எங்கள் தேசிகரே **
இது வழி எய்துக என்று * உகப்பால் எம் பிழை பொறுப்பார் *
இது வழியா மறையோர் அருளால் * யாம் இசைந்தனமே 53

எட்டும் இரண்டும் அறியாத எம்மை * இவை அறிவித்து *
எட்ட ஒண்ணாத இடம் தரும் * எங்கள் அம்மாதவனார் **
முட்ட வினைத் திரள் மாள * முயன்றிடும் அஞ்சல் என்றார் *
கட்டெழில் வாசகத்தால் * கலங்கா நிலை பெற்றனமே 54

** வானுள் அமர்ந்தவர்க்கும் * வருந்த வரு நிலைகள் *
தான் உளனாய் உகக்கும் * தரம் இங்கு நமக்குளதே **
கூன் உள நெஞ்சுகளால் * குற்றம் எண்ணி இகழ்ந்திடும் *
தேன் உள பாத மலர்த் * திருமாலுக்குத் தித்திக்குமே 55

** வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் * விரகால் அடியோம் *
உள்ளத்து எழுதியது ஓலையில் இட்டனம் * யாம் இதற்கென் **
கொள்ளத் துணியினும் கோதென்று இகழினும் * கூர் மதியீர் *
எள்ளத்தனை உகவாது இகழாது * எம் எழில் மதியே 56

**அடிவரவு:** பொய்கை இன்பத்தில் என்னுயிர் ஆரணநூல் நீளவந்து காளம்வலம் ஆளுமுடை திருவுடன் புருடன் ஆராதவருள் கண்ணனடி உத்தம எட்டுமா ஒண்டொடி மூண்டாலும் சாதனமும் தன்னினைவில் பாட்டுக்கு உறுசகடம் மறையுரை இதுவழி எட்டுமிரண்டு வானுள் வெள்ளை மூலம்

**வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்**

---